CAREERINDIA

# பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு (Private)
## முதல்மொழி - தமிழ்
## First Language - Tamil

மதிப்பெண் : 125 | காலம் : 3.15 மணி நேரம்

I. ***பின்வரும் வினா மற்றும் முற்றுப்பெறாத தொடர்களுக்கு மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் குறிப்பிடுக :*** 10 x. 1 = 10

1. வேய் என்பதன் பொருள்..............................
(அ) பாக்கு (ஆ) மூங்கில் (இ) வேம்பு (ஐ) ஆல்

2. வாள், வால் என்பதன் பொருள் வேறுபாடு
(அ) வசித்தல், ஆயுதம் (ஆ) ஆயுதம், வசித்தல்
(இ) விலங்கின் உறுப்பு, ஆயுதம் (ஈ) ஆயுதம், விலங்கின் உறுப்பு

3. 'கலகல' எனச் சிரித்தாள் என்ற தொடரில் 'கலகல' என்பது...............
(அ) இரட்டைக் கிளவி (ஆ) அடுக்குத்தொடர்
(இ) வியங்கோள் வினைமுற்று (ஈ) வினைமுற்று

4. சேர்த்து எழுதுக :- இனிமை + தமிழ்
(அ) இனிதமிழ் (ஆ) இனித்தமிழ்
(இ) இனிமைத்தமிழ் (ஈ) இத்தமிழ்

5. பிரித்து எழுதுக :- செம்மொழி
(அ) செம் + மொழி (ஆ) செ + மொழி
(இ) செம்மை + மொழி (ஈ) செந் + மொழி

6. 'நான் நாளைக்கு வருவேன்' என்ற தொடரில் 'கு' என்பது எந்த வேற்றுமை உருபு?
(அ) இரண்டாம் வேற்றுமை உருபு (ஆ) மூன்றாம் வேற்றுமை உருபு
(இ) நான்காம் வேற்றுமை உருபு (ஈ) ஐந்தாம் வேற்றுமை உருபு

7. 'கொடுத்த' என்பது ....................
(அ) வினைமுற்று (ஆ) வினையெச்சம் (இ) பெயரெச்சம்
(ஈ) தொழிற்பெயர்

8. அடிகளிலும், சீர்களிலும் எழுத்துகள் ஒன்றி வருவது ............எனப்படும்.
(அ) எழுத்து (ஆ) தளை (இ) அசை (ஈ) தொடை

9. வெண்பாவின் ஓசை......................
(அ) துள்ளல் ஓசை (ஆ) தூங்கல் ஓசை
(இ) செப்பல் ஓசை (ஈ) அகவல் ஓசை

10. பகைநாட்டின் பசுக்களைக் கவர்தல்...........
(அ) வெட்சி (ஆ) துஞ்சி (இ) உழிஞை (ஈ) தும்பை

www.careerindia.com

CAREERINDIA

II. **தொடர்புப் படுத்தி எழுதுக :-** 4 x. 1 = 4

11. சீதை அசோகவனத்தில் இருந்தாள்.
இத்தொடரை வினா தொடராக மாற்றுக :-

12. ஆங்கிலப் பழமொழிக்கு இணையான தமிழ்ப் பழமொழி தருக:
Haste makes waste

13. இளக்கண நூல்...............பிழை திருத்தி எழுதுக.

14. பட்டணத்து ஆலமரம்
வெட்ட வெட்ட துளுக்குது. அது என்ன?
இவ்விடுகதையின் விடை எழுதுக.

III. **ஒரு தொடரில் விடை தருக :-** 1 x. 16 = 16

15. முல்லை நிலம் எப்போது சிறந்து காணப்படும்
16. புல்லால் பர்ணசாலையை அமைத்தவன் யார்?
17. பாடினி கலங்கிடுமாறு பாணன் கூறிய சொல் யாது?
18. 'இயல்பு' கவிதையில் மனிதன் தொலைத்தவை யாவை?
19. திரு வி.க. சொற்பொழிவ எவ்வாறு நிகழ்த்துவார்?
20. இளம்பெருவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இருவகையினர் யாவர்?
21. இளைஞனின் நண்பன் எது?
22. இலங்காவித் தீவுகள் எந்த நாட்டின் பகுதி?
23. பம்பன் எந்த அரசனிடம் படைத்தலைவனாக இருந்தான்?
24. கண்ணகி எவருடைய மலையை அடைந்து விண் புகுந்தாள்?
25. பாமர மக்களின் விருப்பமான விளையாட்டு எது?
26. வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் எவற்றால் கௌரவிக்கப்படுகிறது என்று வைரமுத்து கூறுகிறார்.
27. சீதையைக் கண்டதாக இராமனிடம் அறிவித்தது யார்?
28. மலையத்துவன் பெற்ற பெருவாழ்வை உடையது யார்?
29. பேராறு திரவியங்களை அள்ளி வருவதற்கான உவமை யாது?
30. நெல் முதிர்ந்தால் யார் கைக்குப் போய்ச்சேரும் என்று கல்யாணசுந்தரம் கூறுகிறார்?

IV. **மூன்று அல்லது நான்கு தொடரில் விடை தருக :-** 16 x. 2 = 32

31. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்புகள் யாவை?

www.careerindia.com

CAREERINDIA

32. குறுந்தொகை தலைவி எவ்வாறு சமைத்தாள்
33. நெற்கற்றை எவ்வாறு விளங்குகிறது என்று குமரகுருபரர் கூறுகிறார்.
34. அடி என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
35. அணி என்றால் என்ன? அதன் வகைகள் யாவை
36. தமிழ் விடுகதைகளை வெளியிட்டு ஊக்குவித்த இதழ்கள் நான்கினைக் குறிப்பிடுக.
37. நம் தெய்வீகக் கதைகள் உணர்த்தும் உண்மை யாது?
38. தீப்பெட்டி ஆபிஸில் இருந்து திரும்பிய பஸ்கள் எவ்வாறு குழந்தைகளை வெளியே தள்ளியது?
39. மேலை நாடுகளில் உரையாடல் கலை எவ்வாறு மதிக்கப்படுகிறது?
40. பரந்த அறிவாற்றல் உடையவரைப் பழிப்பது எதனைப் போன்றது?
41. தாய், தந்தையரின் கடமையாகப் புறநானூறு கூறுவது யாது?
42. பாணன் தான் கொண்டு வந்த பரிசுப்பொருள் யாது என்பதற்குக் கூறிய முதல் மூன்று சொற்கள் யாவை?
43. C.F.C. ஓசோனில் ஏற்படுத்தும் பாதிப்பு யாது?
44. புறத்திணையின் வகைகள் யாவை?
45. செய்யுளின் உறுப்புகள் யாவை?
46. தொடை என்றால் என்ன? வகைகள் யாவை?

V. ***ஐந்து அல்லது ஆறு தொடரில் விடை தருக :-*** 11 x. 3 = 33

47. மக்கட் பேற்றைப் பற்றி வள்ளுவர் கூறுவனவற்றை எழுதுக.
48. இறந்த காலம் பற்றிக் கவிஞர் வைரமுத்து கூறுவது யாது?
49. ஆசிரியப் பாவின் இலக்கணத்தைச் சான்றுகளுடன் விளக்குக.
50. தற்குறிப்பேற்றணியைச் சான்றுடன் விளக்குக.
51. இளைஞன் எப்போது பாறையில் மோதி பந்தாய் திரும்பி வர நேரும். அதன் விளைவு யாது?

இடம் சுட்டிப் பொருள் விளக்குக :-

52. “ஏதிலாருமினித் தருவாருமில்லை
போதும் வைகிற்றுப் போமிடம் வேறிலை”
53. “ஒற்றுமை யில்லா மனிதகுலம்
உயர்வும் தாழ்வும் வளர்க்குது”

www.careerindia.com

CAREERINDIA

54. "சரி...பூமி கோபப்படற அளவுக்கு மனுஷன் பண்ணின தவறுதான் என்ன?

55. "பாவம்; கொஞ்ச நேரமாவது அவர்கள் அயர்ந்து தூங்கட்டும்"

56. "எம் தமிழ்ப்பாவையைச் சுமந்து செல்லுங்கள்"

57. "பட்டினி கிட பாலையே உண்பதென்று"

VI. ***எட்டு அல்லது பத்துத் தொடரில் விடை தருக :-*** 3 x. 4 = 12

58. எல்லாக் குலங்களையும் சீர்மையடையச் செய்தவள் சீதை என்பதை அனுமான் எவ்வாறு விவரிக்கின்றான்?

அல்லது

இளையான்குடி மாறர் மனைவி சிவனடியார் வடிவில் வந்த சிவனுக்கு அமுது படைக்க, சமைப்பதற்காக மேற்கொண்ட செயல்களை விளக்குக :-

59. சேதுப்பிள்ளையவர்கள் 'இவர்கள் கைவண்ணம் இங்குக் கண்டோம்' என்று கூறிய தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியினை விவரி :

அல்லது

கிராமத்தில் இருக்கும் ஒன்றிரண்டு விவசாயிகள் குறித்து கி. ராஜநாராயணன் கூறும் செய்தியினைக் கூறுக.

60. செங்குட்டுவன் கண்ணகிக்குக் கட்டிய கோயிலைக் கண்டு வியந்ததை விவரி :

அல்லது

தமிழ் இதழ்களும் விடுகதைகளும் குறித்துப் பேராசிரியர் ச.வே.சுப்பிரமணியம் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

VII. ***அடி பிறழாமல் எழுதுக :-*** 1 x. 4 = 4

61. "இனிமைத் தமிழ்மொழி" எனவரும் மொழி வாழ்த்துப்பாடல்

அல்லது

பட்டங்கள் ஆள்வதும்' என வரும் பெண் விடுதலைக் கும்மி' பாடல்.

VIII. ***பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுத்துள்ள வினாக்களுக்கு விடைதருக :-*** 1 x. 4 = 4

62. அயல்நாட்டிலிருந்து தமிழகம் வந்த ஜோசப் பெஸ்கி அடிகளார், தமிழின்பால் ஏற்பட்ட ஈர்ப்புக் காரணமாகத் தமிழைக்

www.careerindia.com

CAREERINDIA

கற்றுத் தனது பெயரையும் 'வீரமா முனிவர்' என்று மாற்றிக் கொண்டதாகத்தான் நாம் அறிந்துள்ளோம். ஆனால் வீரமா முனிவர் என்ற பெயர் மாற்றத்திற்கு முன்பு அவர் தனது பெயரை 'தைரியநாதன்' என்றுதான் வைத்திருந்தார். சிறிது காலத்துக்குப் பிறகு, தனித்தமிழ்பால் கொண்ட பற்றுக் காரணமாகவே அப்பெயரைத் தூய தமிழில் வீரமா முனிவர் என்று மாற்றிக் கொண்டார். அதன்பின்னர் தான் பலரும் தங்கள் பெயர்களைத் தூய தமிழில் மாற்றிக் கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது.

***வினாக்கள் :-***

1. வீரமா முனிவர் குறித்து நாம் அறிந்துள்ளது யாது?
2. வீரமா முனிவர் தன் பெயர் மாற்றத்திற்கு முன்பு தனது பெயரை என்னவென்று வைத்திருந்தார்?
3. வீரமா முனிவர் தன் பெயரை ஏன் அவ்வாறு மாற்றிக் கொண்டார்?
4. வீரமா முனிவர் தன் பெயரை மாற்றிக் கொண்டபின் ஏற்பட்ட வழக்கம் யாது?

IX. 63. உன் பகுதியில் மழையினால் பாதிக்கப்பட்ட சாலைகள் குறித்துத் 'தினமணி' நாளிதழ் ஆசிரியர்க்கு தகுந்த தலைப்புடன் ஒரு செய்தி எழுதுக :-

அல்லது

உன் பள்ளியில் நடைபெறும் இலக்கியமன்ற தொடக்க விழாவிற்கு ஓர் அழைப்பிதழ் தயார் செய்க. 1x. 5 = 5

X. ***பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்துக் கட்டுரை எழுதுக :-*** 1 x. 5 = 5

64. அ. சுற்றுப் புறத் தூய்மை

ஆ. தொலைக்காட்சியின் நன்மை தீமைகள்

இ. குடி குடியைக் கெடுக்கும்

www.careerindia.com